கெடா மாநில தமிழ் எழுத்தாளர் இயக்கம்
PERSATUAN PENULIS-PENULIS TAMIL KEDAH
NO. 8E, JALAN KOLAM AIR, 08000 SUNGAI PETANI, KEDAH DARUL AMAN
(PPKP 3169)

20-7-2012

ப.ஆ. தலைவர்,
வல்லினம்.

அன்புடையீர்,
வணக்கம்.

தயவு கூர்ந்து வல்லினத்தில் இவ்வறிக்கையினை வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

## மலேசிய பெண் எழுத்தாளர்களின் விபரங்கள்

கெடா மாநில தமிழ் எழுத்தாளர் இயக்க ஏற்பாட்டில் மலேசியப் பெண்ணிலக்கியவாதிகளின் விபரங்கள் அடங்கிய ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதை ஏற்கனவே நாளிதழ்களின் வழி அறிவிக்கப்பட்டுள்ளது.

1. சிறுகதை
2. நாவல்
3. புதுக்கவிதை
4. மரபு கவிதை

ஆகிய துறைகளில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஈடுபட்டுள்ள பெண் படைப்பாளிகளின் விபரங்கள் திரட்டப்பட்டு பதிவு செய்யப்பட்டு வருகின்றது. இந்நூல் மலேசிய இலக்கிய உலகில் வரலாற்று ஆவணமாக பதிவு செய்யப்படும்.

ஏறத்தாழ நூறு ஆண்டுகளாக படைப்பிலக்கியத் துறையில் ஈடுபட்டிருக்கும் பெண்களின் விபரங்கள் எதுவும் முழுமையாக இல்லாத நிலையில் அதனை நிறைவு செய்யும் அரிய பணியினை இயக்கம் மேற்கொண்டுள்ளது.

இந்நூல் எதிர்காலத்தில் பெண்களின் இலக்கிய வரலாறு, இலக்கிய ஆளுமை ஆகியவற்றை முன்னிலைப்படுத்தும். நாளைய பட்டயக் கல்வி மாணவர்களின் ஆய்வுக்கும் இந்நூல் பயன்படும்.

திரட்டப்பட்ட விபரங்கள் இறுதிநிலையில் நூலுக்கான ஆயத்த நிலையில் இருக்கின்றது. எனினும் இன்னும் பல பெண்கள் தங்களின் விபரங்களை அனுப்பாத குறை நிலவுகின்றது. எனவே, இந்நூலில் யாரும் விடுபட்டுவிடக்கூடாது என்பதற்காக கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பின்னரும் அனுப்பாதவர்கள் இந்த அரும் பெரும் வரலாற்றில் இடம் பெறும் வாய்ப்புக்கு வழியின்றி போகும். அக்குறைக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பு. இயக்கம் பொறுப்பல்ல என்பதுடன் 2011 ஆம் ஆண்டு வரையில் மேற்கண்ட படைப்புத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் (இதுவரையில் தங்கள் விபரங்களை அனுப்பாதவர்கள்) உடனடியாக தங்கள் இலக்கியத்துறை விபரங்களை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இறுதி நாள்: 31-7-2012.

NO. 3 JALAN TAMAN BERLIAN,
TAMAN BERLIAN,
08000 SUNGAI PETANI,
KEDAH.

க.பாக்கியம்
தலைவர்
கெடா மாநில தமிழ் எழுத்தாளர் இயக்கம்